RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 142 | மே.28, 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## ரூ.8.48 கோடியில் பழநியில் மூத்த குடிமக்களுக்கு உண்டு உறைவிடம்: முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

பழநி: மே.28-

திண்டுக்கல் மாவட்டம் பழநியில் ரூ.8.48 கோடியில் மூத்த குடிமக்களுக்கான உண்டு உறைவிடம் கட்டும் பணிகளை, சென்னை தலைமை செயலகத்தில் இருந்து காணொலி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (மே 27) தொடங்கி வைத்தார்.

ஆதரவற்றோர் , குடும்பத்தினரால் கைவிடப்பட்ட மூத்த குடிமக்களை பாதுகாக்கும் பொருட்டு பழநி, திருநெல்வேலி, சென்னை ஆகிய மூன்று இடங்களில் மூத்த குடிமக்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய உண்டு உறைவிடங்கள் தொடங்கப்படும் என சட்டப்பேரவை கூட்டத்தில் அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அறிவித்திருந்தார்.

அதன்படி, அறுபடை வீடுகளில் 3ம் படை வீடான பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு உட்பட்ட அன்பு இல்ல வளாகத்தில் ரூ.8.48 கோடியில் மூத்தகுடிமக்களுக்கு உண்டு உறைவிடம் கட்டும் பணிகளை, முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்தபடி காணொலி மூலம் இன்று (மே 27) செவ்வாய்கிழமை காலை தொடங்கி வைத்தார்.

உண்டு உறைவிடத்தில் ஒரு அறையில் 4 பேர் தங்கும் வகையில் மொத்தம் 25 அறைகள், வரவேற்பு அறை, பார்வையாளர்கள் அறை, சமையல் கூடம், உணவருந்தும் அறை, பொருட்கள் வைப்பறை, நூலகம், மருந்தகம், கூட்ட அரங்கு, நடைபயிற்சி மேற்கொள்ள வசதியாக நடைபாதையுடன் கூடிய பூங்கா என மொத்தம் 38,750 சதுர அடியில் உண்டு உறைவிடம் அமைக்கப்பட உள்ளது.

பழநி அன்பு இல்ல வளாகத்தில் நடந்த விழாவில் எம்எல்ஏ செந்தில்குமார், எம்பி சச்சிதானந்தம், நகராட்சி தலைவர் உமா மகேஸ்வரி, துணை தலைவர் கந்தசாமி, கோயில் இணை ஆணையர் மாரிமுத்து, அறங்காவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## சத்தீஸ்கரில் பாதுகாப்பு படையினரிடம் நக்சலைட்டுகள் 18 பேர் சரண்!

ராய்ப்பூர்: மே.28-

சத்தீஸ்கர் மாநிலம் சுக்மா மாவட்டத்தில் நக்சலைட்டுகள் 18 பேர் சரண் அடைந்தனர்.

சத்தீஸ்கர் மாநிலத்தில் அண்மைக்காலமாக நக்சலைட்டுகளின் தாக்குதல்களை பாதுகாப்பு படையினர் முறியடித்து வருகின்றனர். பாதுகாப்பு படையினர் நக்சலைட்களை துல்லியமாக சுட்டு வீழ்த்தி வருகின்றனர். இதனால் அங்கு தலைமறைவாக இருக்கும் பல நக்சலைட்டுகள் சரண் அடையும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில் சுக்மா மாவட்டத்தில் நக்சலைட்டுகள் 18 பேர் சரண் அடைந்தனர். சுக்மா எஸ்.பி., கிரண் சவான் கூறியதாவது: நக்சலைட்டுகள் 18 பேர் இன்று சரணடைந்துள்ளனர்.

தெற்கு பஸ்தாரில் தீவிரமாக செயல்படும் நக்சலைட்டுகளும் சரணடைந்துள்ளனர். அவர்கள் மாநில அரசின் கீழ் செயல்படும் திட்டங்களின் அனைத்து நன்மைகளையும் பெறுவார்கள். அனைத்து நக்சலைட்டுகளும் சரணடையுமாறு நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். இவ்வாறு அவர் கூறினார்.

சரணடைந்த நக்சல் மாண்டவி கூறியதாவது: நான் 2015ல் நக்சல் நடவடிக்கைகளில் சேர்ந்தேன். தற்போது பாதுகாப்பு படையினரிடம் சரணடைந்தேன். அவர்கள் மின்சாரம், தண்ணீர், அனைத்தையும் வழங்குகிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# இந்தியாவை வெறுப்பதுதான் பாகிஸ்தானின் ஒரே நோக்கம்

## பிரதமர் நரேந்திர மோடி குற்றச்சாட்டு

தாஹோத்: மே.28-

இந்தியாவை வெறுப்பதும் அதற்கு தீங்கு விளைவிக்கும் வழிகளைப் பற்றி யோசிப்பதும்தான் பாகிஸ்தானின் ஒரே நோக்கமாக உள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

பிரதமர் மோடி 2 நாட்கள் சுற்றுப்பயணமாக குஜராத் மாநிலத்துக்கு நேற்று வருகை தந்தார். இந்நிலையில் தாஹோத் மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்துகொண்டு பேசியதாவது:

கடந்த 2014ம் ஆண்டு இதே தினத்தில் (2014, மே26) முதல் முறையாக பிரதமராக பதவியேற்றேன். அப்போது முதல் நாட்டின் வளர்ச்சி ஒன்றை குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறேன். நாடு முழுவதும் 70 வழித்தடங்களில் வந்தே பாரத் ரயில்கள் இப்போது இயக்கப்படுகின்றன. கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம்.

நமது நாடு வறுமையை ஒழித்து பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ள நிலையில், இந்தியாவை வெறுப்பதும் அதற்கு தீங்கு விளைவிக்கும் வழிகளைப் பற்றி யோசிப்பதும்தான் பாகிஸ்தானின் ஒரே நோக்கமாக உள்ளது. நமது சகோதரிகளின் சிந்தூரை(குங்குமம்) துடைக்கத் துணிபவர்கள் தங்கள் முடிவு



நெருங்கிவிட்டது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

கடந்த ஏப்ரல் 22ம் தேதி காஷ்மீரில் உள்ள பஹல்காமில் 26 பேர் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து மே 7ம் தேதி அதிகாலையில் இந்தியா ஆபரேஷன் சிந்தூரைத் தொடங்கியது. இதன் விளைவாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் தீவிரவாத உள்கட்டமைப்புக்கு பெரும் சேதம் ஏற்பட்டது. ஆபரேஷன் சிந்தூர் என்பது வெறும் ராணுவ நடவடிக்கை மட்டுமல்ல, அது நம் உணர்ச்சிகளின் வெளிப்பாடு.

பிரிவினைக்குப் பிறகு உருவான நாடு இந்தியாவின் மீதான வெறுப்பை உமிழ்கிறது. அது பாரதத்துக்கு தீங்கு விளைவிக்க மட்டுமே விரும்புகிறது. இருப்பினும், இந்தியாவின் இலக்குகள் வறுமையை ஒழித்தல், பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துதல் மற்றும் வளர்ந்த நாடாக மாற்றுவதே ஆகும்.

ஹோலி, தீபாவளி, விநாயகர் சதுர்த்தி போன்ற பண்டிகைகளின்போது இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பொருட்களை மக்கள் வாங்கி பயன்படுத்த வேண்டும். ஸ்மார்ட்போன்கள், வாகனங்கள், பொம்மைகள், ஆயுதங்கள், மருந்துகள் போன்றவற்றை ஏற்றுமதி செய்கிறோம். இது நாட்டுக்கு பெருமை சேர்க்கும் விஷயங்கள் ஆகும்.

நமது பாரத நாட்டின் முன்னேற்றத்துக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் இந்தியாவில் தயாரிக்கப்பட வேண்டும். இந்தியாவை வளர்ச்சி அடைந்த நாடாக மாற்ற, இந்தியர்கள் 140 கோடி பேரும் பாடுபடுகின்றனர். இந்தியாவை ஒரு வளர்ந்த நாடாக மாற்றுவதற்கு உள்கட்டமைப்பு வசதிகளை நாம் மேம்படுத்த வேண்டியது அவசியமாகும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

பிரதமர் மீது மலர் தூவி வரவேற்பு: ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து ஊடகங்களுக்கு விளக்கம் கொடுத்தவர்களில் ராணுவ கர்னல் சோஃபியா குரேஷியும் ஒருவர். இந்நிலையில் வதோதராவில் நேற்று நடைபெற்ற பேரணியில் பங்கேற்ற பிரதமர் மோடி மீது, குரேஷியின் குடும்பத்தினர் ஒரு மேடையில் இருந்தபடி மலர்களைத் தூவி வரவேற்றனர். அவரது பெற்றோர், சகோதரர் முகமது சஞ்சய் குரேஷி, சகோதரி ஷைனா சன்சாரா ஆகியோர் வரவேற்பில் பங்கேற்றனர். இதுதொடர்பான புகைப்படங்களும் வீடியோக்களும் சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகியுள்ளன.

மேலும் ஏராளமான பொதுமக்களும் தேசியக்கொடி ஏந்தியபடி மோடி மீது மலர்களை தூவினர். பொதுமக்களை பார்த்து அவர் உற்சாகமாக கையசைத்தபடியே சென்றார். பின்னர், பிரதமர் மோடியை, குரேஷியின் பெற்றோரும் குடும்பத்தினரும் சந்தித்துப் பேசினர். இதுகுறித்து குரேஷியின் தந்தை தாஜ் முகமது குரேஷி பேசும்போது, ‘‘எங்களுக்கு பிரதமர் மோடி வாழ்த்துத் தெரிவித்தார். நாங்களும் அவருக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டோம். பிரதமரை சந்தித்தது மிகவும் உணர்வுப்பூர்வமாக அமைந்துள்ளது’’ என்றார்.

## தங்கம் விலை சவரனுக்கு ரூ.360 உயர்வு; ஒரு சவரன் ரூ.71,960!

சென்னை: மே.28-

சென்னையில் நேற்று (மே 27) 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ. 360 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.71,960க்கு விற்பனையாகிறது. கிராமுக்கு ரூ.44 உயர்ந்து ஒரு கிராம் ரூ.8,995க்கு விற்பனை செய்யப்படுகிறது.



தமிழகத்தில் கடந்த சனிக்கிழமை (மே 24) ஆபரண தங்கம் கிராம், 8,990 ரூபாய்க்கும், சவரன், 71,920 ரூபாய்க்கும் விற்பனையானது. ஞாயிற்றுக்கிழமை, தங்க சந்தைக்கு விடுமுறை. அன்று முந்தைய நாள் விலையிலேயே ஆபரணங்கள் விற்பனையாகின.

நேற்று (மே 26) தங்கம் விலை கிராமுக்கு, 40 ரூபாய் குறைந்து, 8,950 ரூபாய்க்கு விற்கப்பட்டது. சவரனுக்கு, 320 ரூபாய் சரிவடைந்து, 71,600 ரூபாய்க்கு விற்பனையானது. இந்நிலையில், இன்று (மே 27) 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ. 360 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.71,960க்கு விற்பனையாகிறது.

கிராமுக்கு ரூ.44 உயர்ந்து ஒரு கிராம் ரூ.8,995க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை சவரனுக்கு ரூ.360 உயர்ந்து நகைப்பிரியர்களுக்கு ஷாக் கொடுத்துள்ளது.

## மானாமதுரை - செய்களத்தூர் பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைச்சர் பெரியகருப்பன் குத்துவிளக்கேற்றி வைத்து சிறப்பித்து, வகுப்பறை மற்றும் அலுவலக கட்டிடங்களை பார்வையிட்டார்

மானாமதுரை மே.28

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பகுதிக்குட்பட்ட செய்களத்தூர் காமாட்சியம்மன் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.தமிழரசி ரவிக்குமார் (மானாமதுரை), எஸ்.மாங்குடி (காரைக்குடி) ஆகியோர் முன்னிலையில் குத்துவிளக்கேற்றி வைத்து சிறப்பித்து, வகுப்பறை மற்றும் அலுவலக கட்டிடங்களை பார்வையிட்டு தெரிவிக்கையில்,





தமிழ்நாடு முதலமைச்சர் நல்லாட்சியில், கடந்த நான்கு ஆண்டுகளில் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையிலான பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக தமிழகம் திகழ்ந்து வருகிறது.

அதில் குறிப்பாக, கல்வி மற்றும் சுகாதாரத்தினை தனது இரு கண்களாக கொண்டு, அதற்கென அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து, சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

நடப்பு நிதியாண்டில் பள்ளிக்கல்விக்கென ரூ.49 ஆயிரம் கோடியும், உயர்கல்விக்கென ரூ.09 ஆயிரம் கோடியும் என மொத்தம் ரூ.58 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்துள்ளது குறிப்பிடதக்கதாகும். இந்திய அளவில் உயர்கல்வி கற்பதில் தமிழகம் 52 சதவீதம் பெற்று சிறந்து விளங்கி வருகிறது. அதற்கு அடிப்படையாக, தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ் புதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம் போன்ற திட்டங்கள் சிறந்து விளங்கி வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் சட்டப்பேரவை அறிவிப்பிற்கிணங்க மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது, நேற்றையதினம் தமிழ்நாடு முதலமைச்சர் திருக்கரங்களால் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டுள்ளது பெருமைக்குரிய ஒன்றாகும்.

இதேபோன்று, உயர்கல்வித்துறையின் சார்பில் 10 மாவட்டங்களில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை இன்றையதினம் திறந்து வைத்து சிறப்பித்துள்ளார்கள். இதன் வாயிலாக சொன்னதை செய்யும் முதலமைச்சராக திகழ்ந்து வருகிறார்கள். இத்திட்டம் மட்டுமன்றி, தமிழ்நாடு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்திற்கும் செயல் வடிவம் அளித்திடும் வகையில், அனைத்து திட்டப்பயன்களும் பொதுமக்களுக்கு சென்றடைந்து வருவது குறிப்பிடதக்கதாகும்.

அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் புதிய திட்டப்பணிகள் நிறைவுற்று அவை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அர்பணிக்கப்பட்டு வருகிறது. மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் முனைப்புடன் செயல்பட்டு, அரசின் திட்டங்களின் கீழ் புதிய பணிகளை நடைமுறை படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

சிவகங்கை மாவட்டம் முழுவதும் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு பயனுள்ள வகையில் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் தொடர்ந்து, பல்வேறு பணிகள் நடைபெற்று வருவது, மாவட்டத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாகவும், சான்றாகவும் அமைகிறது.

இன்றையதினம் மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் உயர்கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு பயனுள்ள வகையில் தற்காலிக கட்டிடத்தில் தொடங்கப்பட்டுள்ள இக்கல்லூரியில் சேர்வதற்கென 3,167 விண்ணப்பங்கள் தற்சமயம் வரை பெறப்பட்டுள்ளது. மாணாக்கர் சேர்க்கைக்கென இன்றையதினம் (27.05.2025) வரை விண்ணப்பிக்கலாம். இக்கல்லூரியில் B.A., Political Science , B.A., Economics, B.A., History, B.Sc., Computer Science, B.Com (General) என 5 பாடப்பிரிவுகள் உள்ளன. இக்கல்லூரியில் மாணாக்கர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் மேம்படுத்தி தரப்படும். இன்னும் கூடுதல் வசதிகள் தேவைப்படின் அதனையும் மேம்படுத்தி தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதுபோன்று, பல்வேறு புதிய திட்டங்கள் தமிழ்நாடு முதலமைச்சரால் தொலைநோக்கு சிந்தனையுடன் செயல்படுத்தப்பட்டு, பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியான முதலமைச்சராகவும் முதன்மையான முதலமைச்சராகவும், தமிழ்நாடு முதலமைச்சர் திகழ்ந்து வருகிறார் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், மானாமதுரை நகர்மன்றத்தலைவர் மாரியப்பன் கென்னடி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் கோவிந்தன், மானாமதுரை வட்டாட்சியர் கிருஷ்ணகுமார் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# ஜார்க்கண்ட் என்கவுன்ட்டரில் மாவோயிஸ்ட் கமாண்டர் துளசி புயின்யா சுட்டுக்கொலை

பலாமு, மே.28-

மாவோயிஸ்ட் உயர்மட்ட கமாண்டர் துளசி புயின்யா ஜார்க்கண்ட், பலாமு காவல்துறையின் கூட்டு நடவடிக்கையின்போது சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மாவோயிஸ்டுகளுக்கு எதிராக ஜார்க்கண்டில் நடைபெறும் தொடர்ச்சியான நடவடிக்கையில், அம்மாநில போலீஸார் இன்று பலாமு மாவட்டத்தில் மாவோயிஸ்ட் கமாண்டர் துளசி புயின்யாவை சுட்டுக் கொன்றனர்.

இதுகுறித்து பேசிய ஜார்க்கண்ட் காவல்துறை செய்தித் தொடர்பாளர் மற்றும் ஐஜி அமோல் வி.ஹோம்கர், "பலாமுவில் இன்று அதிகாலை முதல் மாவோயிஸ்டுகளுக்கு எதிரான நடவடிக்கை நடந்து வருகிறது. இந்த நடவடிக்கையில் ஜார்க்கண்ட் ஜாகுவார் மற்றும் பலாமு காவல்துறையினர் ஈடுபட்டுள்ளனர். இந்த மோதலில் ஒரு மாவோயிஸ்ட் தளபதி துளசி புயின்யா கொல்லப்பட்டார், ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன. இம்மோதலின் போது பல மாவோயிஸ்ட்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அப்பகுதியில் வீரர்கள் பெரிய அளவில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

புயின்யாவின் குழுவில் இருந்த மாவோயிஸ்ட் நிதேஷ் யாதவின் தலைக்கு ரூ.15 லட்சம், சஞ்சய் கோத்ராம் தலைக்கு ரூ.10 லட்சம் வெகுமதி அறிவிக்கப் பெற்றவர்களாவர். இவர்களும் இந்த மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டனர். கடந்த 15 ஆண்டுகளாக, நிதேஷ் யாதவ் ஜார்க்கண்ட் மற்றும் பிஹார் காவல்துறைக்கு ஒரு சவாலாக இருந்து வந்தவர். இந்நிலையில் இவர்கள் வீழ்த்தப்பட்டுள்ளனர்.

ஜார்க்கண்ட் காவல்துறையின் உயர் அதிகாரிகள் மற்றும் ஜார்க்கண்ட் ஜாகுவார் அதிகாரிகள் தொடர்ந்து நிலைமையைக் கண்காணித்து வருகின்றனர். பாதுகாப்புப் படையினர் இந்த முழுப் பகுதியையும் சுற்றி வளைத்துள்ளனர். மாவோயிஸ்ட் தளபதி துளசி புயின்யாவின் உடல் சம்பவ இடத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது" என்று கூறினார்.

பலாமு எஸ்.பி ரிஷ்மா ரமேசன் உட்பட ஜார்க்கண்ட் ஜாகுவார் உயர் அதிகாரிகள் அந்தப் பகுதியில் முகாமிட்டுள்ளனர். ஹுசைனாபாத், முகமதுகஞ்ச் மற்றும் ஹைதர்நகர் எல்லைப் பகுதிகளில் நிதேஷ் யாதவ் தனது குழுவுடன் ஒரு பெரிய சம்பவத்தை நடத்த திட்டமிட்டபோது இந்த மோதல் நடந்ததாக காவல்துறை தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை (மே 24, 2025) ஜார்க்கண்ட் ஜன் முக்தி பரிஷத் தலைவர் பப்பு லோஹ்ரா எனப்படும் சூர்யதேவ் லோஹ்ரா உட்பட இரண்டு பயங்கரமான மாவோயிஸ்ட்கள், லதேஹர் மாவட்டத்தின் இச்சாபர் காட்டில் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டனர்.

இதேபோல், கடந்த திங்கட்கிழமை (மே 26, 2025) மாவோயிஸ்ட்களுடனான மற்றொரு மோதலில், லதேஹர் போலீஸார் ரூ.5 லட்சம் வெகுமதி அறிவிக்கப்பட்டிருந்த மணீஷ் யாதவை சுட்டுக் கொன்றனர், மேலும் ரூ. 10 லட்சம் வெகுமதி அறிவிக்கப்பட்டிருந்த மாவோயிஸ்ட் குந்தன் சிங் கர்வாரை கைது செய்தனர் என்பது நினைவுகூரத்தக்கது.

# சென்னை அருகே 5 ஆம் வகுப்பு படிக்கும் மாணவி IGCSE தேர்வில் 10 ஆம் வகுப்பு தேர்வு எழுதி தேர்ச்சி பெற்று அசத்தல்

சென்னை, மே.28-

இயற்பியல் பிரிவில் 92 சதவிகதத்துடன் முதல் இடம் பிடித்து உலகளவில் இளைய சாதனையாளர் என்ற உலக சாதனை படைத்துள்ளார்

லண்டனில் உள்ள கேம்பிரிட்ஜ் போர்டின் கீழ் இயங்கும் IGCSE பாடத்திட்டத்தில் படிக்கும் மாணவர்கள் உலக அளவில் உள்ள எவரும் வயது வரம்பு இல்லாமல் யார் வேண்டுமானாலும் எந்த விதமான பாடத்திட்டத்தை குறித்தும் தேர்வு எழுதலாம்.

இதில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு உலக அளவில் உள்ள பள்ளிகள் மற்றும் வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்கப்படுவது வழக்கமான ஒன்று.

சென்னை பெரும்பாக்கத்தை சேர்ந்த 11 வயதான தக்ஷினா என்ற மாணவி மேடவாக்கத்தில் உள்ள ஸ்ரீ சைத்தன்யா பாத்வே பள்ளியில் 5 ஆம் வகுப்பு படித்து வருகிறார்.




இவர் கல்வி பயிலும் அதே நேரத்தில் பள்ளியில் நடக்கும் "சைல்ட் புரோட்டோஜி ப்ரோக்ராம்" போன்ற பல்வேறு கற்றல் திறன் பயிற்சிகளையும் மேற்கொண்டு வருகிறார்.

இவரின் கற்றல் ஆற்றலை அறிந்த பள்ளி நிர்வாகம் உலக அளவில் நடைபெறும் இந்த IGCSE தேர்வுக்காக 100 நாட்கள் இவருக்கு சிறப்பு பயிற்சி கொடுத்துள்ளனர்.

பயிற்சியை முடித்த மாணவி தக்ஷினா கடந்த மார்ச் மாதம் சென்னையில் நடைபெற்ற நேர்முகத் தேர்வில் பங்கு கொண்டு பத்தாம் வகுப்பு பாடத்திட்டத்தில் இயற்பியல் பிரிவில் மூன்று நாட்கள் தேர்வு எழுதினார்.

இதனை அடுத்து தேர்வுக்கான அறிவிப்பு வெளியானது. அதில் மாணவி தேர்வு பெற்றதுடன் 92 சதவிகிதத்துடன் ஏ ப்ளஸ் பிரிவில் முதல் இடத்தை பிடித்து சாதனை படைத்துள்ளார்.

இதனால் குறைந்த வயதில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவி பத்தாம் வகுப்பு IGCSE தேர்வு எழுதி தேர்ச்சி பெற்று முதல் இடம் பிடித்ததுடன் இளைய சாதனையாளர் என்ற உலக சாதனையும் படைத்து அசத்தியுள்ளார் 5ம் வகுப்பு பள்ளி மாணவி.

இது மட்டுமல்லாமல் இவர் பரதநாட்டிய மாணவியாக ஏழு ஆண்டுகள் பயிற்சி மேற்கொண்டு வருகிறார். மேலும் இவர் ஒரு பன்னாட்டு நிறுவனத்தின் தலைமை அதிகாரியாக வரவேண்டும் என்பதை ஒரு லட்சியமாக கொண்டுள்ளார் என்பது தெரியவந்தது.

மாணவி இந்த உலக சாதனை படைத்தது பெரும் மகிழ்ச்சியையும் பெருமையும் சேர்த்துள்ளதாக கல்வி நிர்வாக சார்பில் ஸ்ரீ சைதன்யா கல்வி நிறுவனங்களின் இயக்குநர் சீமா போப்பன ராவ், கல்வித் தலைவர் புஷ்பவல்லி, தமிழ்நாடு சைதன்யா பள்ளிகளின் தலைமை நிர்வாக அதிகாரி ஹரி பாபு ஆகியோர் அறிவுத்தலின்படி ஏஜிஎம் ஸ்ரீனிவாசலு, மேடவாக்கத்தில் உள்ள ஃபியூச்சர் பாத்வேஸின் முதல்வர் மீனாட்சி ஆகியோரின் தலைமையில் பாராட்டி சால்வை அணிவித்து பாராட்டினார்கள் இதில் ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்





## தெலுங்கு செட்டியார் உறவின்முறைக்கு கல்வி பரிசளிப்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தேனி, மே.28-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் காந்திநகர் திருமலாபுரம் தெற்கு தெரு 24மனை தெலுங்கு செட்டியார் உறவின்முறைக்கு கல்வி பரிசளிப்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு மேல் J.K.பட்டி திருமலாபுரம் காமாட்சி அம்மன் கோவில் வளாகத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சி திண்டுக்கல் ஆர். நடராஜன் (24 மனை தெலுங்கு செட்டியார் தலைமைச் சங்கம் Ex.சேர்மன் திண்டுக்கல் மாநகராட்சி) தலைமையில் நடைபெற்றது. 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவி தொகையும் பெற்றோர்களுக்கு வேஷ்டி சேலையும் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர்களுக்கு வழங்கப்பட்டது. இவ்விழாவில் வெங்கடாசலம் தேனி மாவட்ட தலைவர், முருகேசன் மாவட்ட செயலாளர், செல்லப்பாண்டி மாவட்ட பொருளாளர், ரமேஷ்குமார் கவுன்சிலர் மாவட்ட மாணவரணி தலைவர், நாகேந்திர பாண்டியன் மாவட்ட கல்வி மேம்பாட்டுகுழு தலைவர், மணிமாறன் மாவட்ட இளைஞர் அணி தலைவர் மற்றும் 24 மணி தெலுங்கு செட்டியார்கள் உறவின்முறை போடி நகர் நிர்வாகிகளும் உறுப்பினர்களும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டனர்.

# 'வகுப்பை தவிர்த்தால் விசாவை இழப்பீர்கள்' வெளிநாட்டு மாணவர்களுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

வாஷிங்டன், மே.28-

இந்தியா மற்றும் பிற வெளிநாட்டு மாணவர்கள் வகுப்புகளை தவிர்த்தால், அவர்கள் தங்களின் விசாக்களை இழக்க நேரிடும் என்று அமெரிக்க அரசு எச்சரித்துள்ளது. மேலும் எதிர்காலத்தில் எந்தவித அமெரிக்க விசாவுக்கும் அனுமதி பெற முடியாமல் போகலாம் என்றும் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "நீங்கள் பள்ளியை விட்டு வெளியேறினால், வகுப்புகளை தவிர்த்தால், பள்ளிக்குத் தெரியாமல் பாடத்திட்டத்தை விட்டு வெளியேறினால் உங்களின் ஸ்டுடண்ட் விசா ரத்து செய்யப்படும். மேலும், எதிர்காலத்தில் வேறு எந்த விசாக்கள் பெறுவதற்கான தகுதிகளையும் இழக்க நேரிடும். அதனால், பிரச்சினைகளைத் தவிர்க்க எப்போதும் உங்களுக்கான விசா விதிமுறைகளை கடைபிடித்து, மாணவர் நிலையை பராமரிக்கவும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அமெரிக்க அரசு எவ்விதமான முன்னறிவிப்பும் இல்லாமல், விசாக்களை ரத்து செய்வதன் மூலம் சர்வதேச மாணவர்கள் மீதான தங்களின் ஒடுக்குமுறையைத் தீவிரப்படுத்தியுள்ளது. பாலஸ்தீன ஆதரவு போராட்டம் முதல் போக்குவரத்து விதிமீறல் என ஒவ்வொரு வழக்குகளுக்கும் காரணங்கள் வேறுபடுகின்றன. இவை மாணவர்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன என்ற விமர்சனங்களும் எழுந்துள்ளன.

# ரயில்களில் 2ம் வகுப்பு பெட்டி காத்திருப்பு பட்டியல் பயணிகளுக்கு ஏசி பெட்டிகளின் காலி இடங்களை ஒதுக்கீடு செய்ய முடிவு

சென்னை, மே.28-

ரயிலில் இரண்டாம் வகுப்பு தூங்கும் வசதி (ஸ்லீப்பர் பெட்டிகளில்) பெட்டிகளில் டிக்கெட் கிடைக்காமல் காத்திருப்போர் பட்டியலில் உள்ள பயணிகளுக்கு ஏசி வகுப்பு பெட்டிகளில் காலியாக உள்ள இடங்கள் கூடுதல் கட்டணம் இன்றி ஒதுக்கும் வசதியை மேலும் 2 நிலைகள் வரை விரிவாக்கம் செய்யப்படவுள்ளது.



இதன் மூலமாக, 2ம் வகுப்பு தூங்கும் வசதி பெட்டிகளில் காத்திருப்போர் பட்டியலில் உள்ள பயணிகளுக்கு 3ம் வகுப்பு ஏசி அல்லது 2 ம் வகுப்பு ஏசி பெட்டிகளில் காலியாக உள்ள இடங்கள் கூடுதல் கட்டணம் இன்றி ஒதுக்கப்பட உள்ளது.

பயணிகளின் காத்திருப்போர் பட்டியலை குறைக்க, கூடுதல் பெட்டிகள் சேர்ப்பது உட்பட பல நடவடிக்கைகளை ரயில்வே நிர்வாகம் எடுத்து வருகிறது. இது தவிர, ஒரு ரயிலில் 2ம் வகுப்பு தூங்கும் வசதி பெட்டிகளில் காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கு 3ம் வகுப்பு ஏசி பெட்டிகளில் காலியிடங்கள் இருந்தால், அதில் ஒதுக்கீடு செய்யும் முறையும் இருக்கிறது. இந்த முறை கடந்த 2006ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இது காத்திருப்புப் பட்டியலில் உள்ள பயணிகளை மேம்படுத்துவதற்கான திட்டம் என்று அழைக்கப்படுகிறது.

கூடுதல் கட்டணம் இல்லை: இந்நிலையில், இத்திட்டத்தை விரிவாக்கம் செய்ய ரயில்வே வாரியம் முடிவு செய்துள்ளது. அதாவது, ரயிலில் இரண்டாம் வகுப்பு தூங்கும் வசதி பெட்டியில் காத்திருக்கும் பயணிகளுக்கு 3ம் வகுப்பு ஏசி பெட்டி, 2ம் வகுப்பு ஏசி பெட்டிகளில் காலி இடங்கள் இருந்தால், அவற்றில் கூடுதல் கட்டணம் இன்றி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் 3ம் வகுப்பு எக்னாமிக் பெட்டியில் காத்திருப்போர் பட்டியல் உள்ள பயணிகளுக்கு 3ம் வகுப்பு ஏசி, 2ம் வகுப்பு ஏசி பெட்டிகளில் காலி இடங்கள் இருந்தால் ஒதுக்கப்படும். இதுபோல, 3ம் வகுப்பு ஏசி பெட்டிகளில் காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கு 2ம் வகுப்பு அல்லது முதல் வகுப்பு குளிர்சாதன பெட்டிகளில் காலி இடங்கள் இருந்தால் கூடுதல் கட்டணமின்றி இருக்கைகள் ஒதுக்கீடு செய்யப்படும். இது தவிர, ரயிலில் இரண்டாம் வகுப்பு முன்பதிவு இருக்கை பெட்டியிலும் இந்த முறை நடைமுறைப்படுத்தப்படும்.

இதுபோல, இரண்டாம் வகுப்பு ஏசி பெட்டியில் காத்திருப்போர் பட்டியலில் உள்ள பயணிகளுக்கு முதல்வகுப்பு ஏசியில் காலி இடமிருந்தால் ஒதுக்கீடு செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்தகவல் ரயில்வே வாரிய சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த சுற்றறிக்கை அனைத்து ரயில்வே மண்டலங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இதுகுறித்து, ஓய்வு பெற்ற மூத்த ரயில்வே தொழிற்சங்க தலைவர் மனோகரன் கூறும்போது, "காத்திருப்போர் பயணிகளை மேம்படுத்துவதற்கான திட்டம் விரிவுப்படுத்தப்பட உள்ளது வரவேற்கதக்கது. இதன்மூலமாக, ரயில்வேக்கும் கணிசமான வருமானம் கிடைக்கும். அதிக பயணிகளும் பயனடைவார்கள்" என்றார்.

# தாம்பரம் எல்லையில் 27 ஆய்வாளர்கள் பணியிட மாற்றம்: ஆணையர் அபின் தினேஷ் உத்தரவு

தாம்பரம், மே.28-



தாம்பரம் மாநகர காவல் ஆணையரக எல்லைக்குட்பட்ட காவல் நிலையங்களில் பணியாற்றி வந்த 27 ஆய்வாளர்களை பணி இடம் மாற்றம் செய்து தாம்பரம் மாநகர காவல் ஆணையர் அபின் தினேஷ் மோடக் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து தாம்பரம் மாநகர காவல் ஆணையரகத்தில் இருந்து வெளியிடப்பட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது; குரோம்பேட்டை சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் ராஜ சேகரன், செம்மஞ்சேரி சட்டம் ஒழுங்கு ஆய்வாளராகவும், கண்ணகி நகர் சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் தயால், குரோம்பேட்டை சட்டம் ஒழுங்கு ஆய்வாளராகவும், பள்ளிக்கரணை மதுவிலக்கு அமலாக்க பிரிவு ஆய்வாளர் நடராஜ், கண்ணகி நகர் சட்டம் ஒழுங்கு ஆய்வாளராகவும், பல்லாவரம் சட்டம் மற்றும் ஒழுங்கு ஆய்வாளர் தினேஷ், பள்ளிக்கரணை மதுவிலக்கு அமலாக்க பிரிவு ஆய்வாளராகவும், ராணிப்பேட்டை பகுதியில் இருந்து பழனிவேல் என்பவர் பல்லாவரம் சட்டம் ஒழுங்கு ஆய்வாளராகவும்,

கூடுவாஞ்சேரி சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் முருகேசன், பள்ளிக்கரணை சட்டம் ஒழுங்கு ஆய்வாளராகவும், பள்ளிக்கரணை சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் நெடுமாறன், கூடுவாஞ்சேரி சட்டம் ஒழுங்கு ஆய்வாளராகவும், மணிமங்கலம் சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் அசோகன், மத்திய குற்றப்பிரிவிற்கும், காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்த டில்லி பாபு, மணிமங்கலம் சட்டம் ஒழுங்கு ஆய்வாளராகவும், காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்த ஆண்டனி சகாய பரத், சோமங்கலம் சட்டம் ஒழுங்கு ஆய்வாளராகவும்,

காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்த சித்ரா, செம்மஞ்சேரி குற்றப்பிரிவு ஆய்வாளராகவும், காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்த முத்துக்குமார், சோமங்கலம் குற்றப்பிரிவு ஆய்வாளராகவும், சேலையூர் குற்றப்பிரிவு ஆய்வாளர் கணேஷ் பாண்டியன், சிட்லபாக்கம் குற்றப்பிரிவு ஆய்வாளராகவும், காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்த சந்திரசேகரன், நுண்ணறிவு பிரிவுக்கும், காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்த ராஜா, பள்ளிக்கரணை குற்றப்பிரிவு ஆய்வாளராகவும்,

காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்த முருகானந்தம் மத்திய குற்றப்பிரிவுக்கும், திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த கார்த்திகா, மத்திய குற்றப்பிரிவுக்கும், காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்த முருகன், மத்திய குற்றப்பிரிவுக்கும், காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்த புஷ்பம், மத்திய குற்றப்பிரிவுக்கும், மத்திய குற்றப்பிரிவு பரணிதரன், கேளம்பாக்கம் குற்றப்பிரிவு ஆய்வாளராகவும்,

காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்த வானதி, நுண்ணறிவு பிரிவுக்கும், தாம்பரம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் மகுடீஸ்வரி, சேலையூர் குற்றப்பிரிவு ஆய்வாளராகவும், வண்டலூர் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் மாலினி, தாம்பரம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளராகவும், காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்த ஷீலா,

வண்டலூர் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளராகவும், காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்த கலைச்செல்வி, கானத்தூர் குற்றப்பிரிவு ஆய்வாளராகவும், கேளம்பாக்கம் குற்றப்பிரிவு ஆய்வாளர் நாஞ்சில் குமார், காவல் கட்டுப்பாட்டு அறைக்கும், நுண்ணறிவு பிரிவு வசந்தி காவல் கட்டுப்பாட்டு அறைக்கும் பணியிடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு அச்செய்தி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது .

# ஜூன் 19ல் தமிழகத்தில் மாநிலங்களவை தேர்தல்: யாருக்கு எத்தனை இடங்கள்?

சென்னை, மே.28-

தமிழகத்தில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 6 எம்பிக்களின் பதவிக் காலம் நிறைவடைகிறது. அந்த இடங்களுக்கு ஜூன் 19ம் தேதி தேர்தல் நடைபெறும் என்று தலைமை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

திமுக மாநிலங்களவை எம்பிக்கள் எம்.சண்முகம், முகமது அப்துல்லா, பி.வில்சன், பாமக எம்பி அன்புமணி, அதிமுக எம்பி சந்திரசேகரன், மதிமுக எம்பி வைகோ ஆகியோரின் பதவிக் காலம் ஜூலை 24ம் தேதியுடன் நிறைவடைகிறது. இந்த சூழலில் தமிழகத்தில் இருந்து 6 புதிய மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்வு செய்ய ஜூன் 19ம் தேதி தேர்தல் நடைபெறும் என்று தலைமை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதற்கான வேட்பு மனு தாக்கல் ஜூன் 2ம் தேதி தொடங்குகிறது. வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய ஜூன் 9ம் தேதி கடைசி நாளாகும். ஜூன் 10ம் தேதி வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்படும். வேட்பு மனுக்களை வாபஸ் பெற ஜூன் 12ம் தேதி கடைசி நாள் ஆகும்.

ஒருவேளை போட்டி இருந்தால் ஜூன் 19ம் தேதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்குப் பதிவு நடைபெறும். அன்றைய தினம் மாலை வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் என்று தலைமை தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. அசாம் மாநிலத்தில் பாஜக எம்பி ரஞ்சன் தாஸ், அசாம் கணபரிஷத் எம்பி வீரேந்திர பிரசாத் பைஷியா ஆகியோரின் பதவிக் காலம் ஜூன் 14ம் தேதி நிறைவடைகிறது. இந்த இரு இடங்களும் ஜூன் 19ம் தேதி தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

யாருக்கு எத்தனை இடங்கள்? மாநிலங்களவைத் தேர்தலில் தமிழக எம்எல்ஏக்கள் வாக்கினை பதிவு செய்வார்கள். தற்போதைய நிலையில் திமுக கூட்டணிக்கு 4 இடங்கள், அதிமுக கூட்டணிக்கு 2 இடங்கள் கிடைக்க வாய்ப்பிருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டு உள்ளது. திமுக, அதிமுக கூட்டணியில் யாருக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்பது விரைவில் தெரியவரும்.




# மூணாறில் மண்சரிவு அபாயம்: இரவு நேரத்தில் மாற்று பாதையில் பயணிக்க உத்தரவு

போடி, மே.28-

மூணாறில் கனமழை பெய்து கேப் ரோடு உள்ளிட்ட பகுதிகளில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது. ஆகவே இரவு நேரத்தில் வாகனங்கள் மாற்றுப்பாதையில் செல்ல வேண்டும் என்று இடுக்கி ஆட்சியர் விக்னேஸ்வரி தெரிவித்துள்ளார்.

தேனி மாவட்ட தமிழக எல்லையில் இடுக்கி மாவட்டத்தின் மூணாறு உள்ளது. பிரசித்தி பெற்ற சுற்றுலாத்தலமான இங்கு தற்போது பருவமழை தீவிரமடைந்துள்ளது. வானிலை மையம் ரெட் அலர்ட் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து இங்குள்ள பல சுற்றுலா தலங்கள் மூடப்பட்டுள்ளன. இங்கு மலைகளை உடைத்தே பல சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் மழைக்காலங்களில் மண்சரிவு ஏற்படுவது வழக்கம்.

இதில் தேவிகுளத்தில் இருந்து பூப்பாறை செல்லும் சாலையான கேப் ரோடு எனும் இடம் மண்சரிவு அபாயப் பகுதி பட்டியலில் உள்ளது. ஒவ்வொரு மழையின் போதும் இங்கு மண்சரிவும், பாதிப்பும் அதிகம் ஏற்படும். தற்போது கனமழை பெய்து வருவதால் ஆங்காங்கே லேசான மண்சரிவு ஏற்பட்டு வருகிறது. ஆகவே இப்பாதையில் இரவு நேர பயணத்தை தவிர்க்கும்படி இடுக்கி மாவட்ட ஆட்சியர் விக்னேஸ்வரி தெரிவித்துள்ளார்.

இதற்கு மாற்றுப் பாதையான பூப்பாறையில் இருந்து பள்ளிவாசல், ராஜாக்காடு, ராஜகுமாரி, தேவிகுளம் வழியே வாகனங்கள் மூணாறு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது மோசமான காலநிலை இடுக்கியில் நிலவி வருவதால் மூணாறு உள்ளிட்ட பகுதிகளுக்கு அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டுமே வாகனங்களில் வரவும் மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தி உள்ளது.

# நேரடி கொள்முதல் நெல்லுக்கு 10 நாட்களில் பணம்: விவசாயிகளிடம் நுகர்பொருள் வாணிப கழகம் உறுதி

சென்னை, மே.28-

'நெல் கொள்முதலில் முறைகேடுதனியார் நிறுவனத்துக்கு தமிழக அரசு துணை போகலாமா?' என்ற தலைப்பில் 'இந்து தமிழ் திசை' நாளிதழில் பி.ஆர். பாண்டியன் எழுதிய கட்டுரை நேற்று (திங்கள்) வெளியாகி இருந்தது.

இந்நிலையில், விவசாயிகளிடம் கொள்முதல் செய்த நெல்லுக்கு 10 நாட்களில் பணம் வழங்கப்படும் அரசு உறுதியை அளித்துள்ளது. தமிழகத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நடைபெறும் முறைகேடுகளை தடுக்க வலியுறுத்தி சென்னை கோயம்பேட்டில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மேலாண் இயக்குநர் அலுவலகத்தை இன்று (செவ்வாய்) முற்றுகையிடப்படும் என தமிழ்நாடு அனைத்து விவசா



யிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு அறிவித்திருந்தது.

முன்னதாக, அக்குழுவின் தலைவர் பி.ஆர். பாண்டியன் உள்ளிட்ட விவசாயிகளுடன் டிஎன்சிஎஸ்சி மேலாண் இயக்குர் சண்முகசுந்தரம் தலைமையில் நேற்று டிஎன்சிஎஸ்சி அலுவலகத்தில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்த நெல்லுக்கு 10 நாட்களுக்குள் அனைவருக்கும் பணம் வழங்கப்படும். கொள்முதலில் தனியாரை அனுமதிப்பதில்லை என அரசுக்கு பரிந்துரைக்கப்படும் என அதிகாரிகள் உறுதியளித்தனர்.

அதனைத் தொடர்ந்து பி.ஆர்.பாண்டியன் செய்தியாளர்களிடம் கூறும்போது, "உணவுத்துறை மற்றும் டிஎன்சிஎஸ்சி அதிகாரிகள் உறுதியளித்ததன் அடிப்படையில், முற்றுகை போராட்டத்தை தள்ளிவைக்கிறோம்'' என்றார்.

## காரைக்குடியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 2025ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கு விருப்பமுள்ள மாணவர்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதள முகவரியின் வாயிலாக விண்ணப்பிக்கலாம்

# மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தகவல்

காரைக்குடி. மே.28

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 2025 ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை தொடங்கிவுள்ளது. காரைக்குடி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ஏற்கனவே உள்ள பொருத்துநர் (Fitter), கடைசலர் (Turner), இயந்திர வேலையாள் (Machinist), கம்பியாள் (Wireman) போன்ற இரண்டு வருட தொழிற்பிரிவுகளும், பற்றவைப்பவர் (Welder), கணினி இயக்குபவர் (COPA) போன்ற ஓராண்டு தொழிற்பிரிவுகளுடன், நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்ப புதிதாக தொடங்கப்பட்டுள்ள (Industry 4.0 TATA Technology) தொழில் 4.0 மைய தொழிற்பிரிவுகளான மேம்பட்ட CNC மெஷினிங் டெக்னிஷியன் (Advanced CNC Machining Technician), அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர் (Basic Designer and Virtual Verifier (Mechanical)), மெக்கானிக் எலக்ட்ரிக் வாகனம் (Mechanic Electric Vehicle) போன்ற இரண்டு வருட தொழிற்பிரிவுகளும், தொழில்துறை ரோபாட்டிக்ஸ் மற்றும் டிஜிட்டல் உற்பத்தி தொழில்நுட்ப வல்லுநர் (Industrial Robotics and Digital Manufacturing Technician) ஓராண்டு தொழிற்பிரிவுகளும் உள்ளன.



குறிப்பிட்டுள்ள தொழிற்பிரிவுகளில் Wireman மற்றும் Welder தொழிற்பிரிவை தவிர மற்ற தொழிற்பிரிவில் சேர மாணவர்கள் கட்டாயம் SSLC (10 ஆம் வகுப்பு) தேர்ச்சி பெற்றிருத்தலும், கம்பியாள் (Wireman) மற்றும் பற்றவைப்பவர் (Welder) தொழிற்பிரிவில் சேர மாணவர்கள் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தலும் வேண்டும்.

மேலும், மாணவர்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதள முகவரியின் வாயிலாக விண்ணப்பித்திடல் வேண்டும். இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க இயலாத மாணாக்கர்கள் " தொழிற்பயிற்சி நிலைய சேர்க்கை உதவி மையமான" காரைக்குடி அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு நேரில் வருகைபுரிந்து இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

அவ்வாறாக விண்ணப்பிக்க வருகைபுரியும் பொழுது மாணாக்கர்கள் தங்களது நிரந்தர தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, மதிப்பெண் சான்றிதழ் (8th/10th), சாதி சான்றிதழ், மாற்று சான்றிதழ், முன்னுரிமை சான்றிதழ் மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவைகளை உடன் எடுத்துச் செல்லவேண்டும். அதுமட்டுமன்றி, விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப கட்டணமாக ரூ.50/ இணையதளம் வழியாக செலுத்தும் வகையில், Debit Card/Credit Card –னை உடன் எடுத்துச் செல்லவேண்டும்.

அதுமட்டுமன்றி, பயிற்சியின் போது அரசுப் பள்ளியில் படித்த அனைத்து பயிற்சியாளர்களுக்கும், அரசால் வழங்கப்படும் உதவித்தொகை மாதம் ரூ.1,750/ம், இலவச பாடப்புத்தகங்கள், மிதிவண்டி, சீருடைகள், காலணிகள், இலவச பஸ்பாஸ் ஆகியவைகளும் வழங்கப்படும். மேலும், பயிற்சியின் போது பிரபல தொழில் நிறுவனங்களில் பயிற்சியும், பயிற்சி காலம் முடிவுற்றவுடன் பிரபல நிறுவனங்களில் ரூ.20,000/ சம்பளத்தில் வேலை வாய்ப்பும் ஏற்படுத்தி தரப்படும்.

மேலும், சேர்க்கை தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு 9499055784, 9499055785 என்ற அலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.




# சென்னை ஐஐடியில் 4 புதிய படிப்புகள் அறிமுகம்

சென்னை, மே.28-

2 பிடெக் படிப்புகள் உள்பட சென்னை ஐஐடியில் இந்த ஆண்டு 4 புதிய படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

இதுதொடர்பாக சென்னை ஐஐடி நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது: இன்றைய கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில்துறையின் தேவை ஆகியவற்றை கருத்தில்கொண்டும், தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு மாணவர்களை தயார்படுத்தும் நோக்கிலும், சென்னை ஐஐடியில் பிஎஸ் வேதியியல், எம்டெக் எலெக்ட்ரிக் வெகிக்கில்ஸ், பிடெக் கம்ப்யூடேஷனல் இன்ஜினியரிங் மற்றும் மெக்கானிக்ஸ், பிடெக் இன்ஸ்ட்ருமென்டேஷன் மற்றும் பயோமெடிக்கல் இன்ஜினியரிங் ஆகிய 4 புதிய படிப்புகள் 20252026ம் கல்வி ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

பிஎஸ் வேதியியல் படிப்புக்கான மாணவர் சேர்க்கை இந்திய அறிவியல் கல்வி ஆராய்ச்சி நிறுவனம் (ஐசர்) நடத்தும் நுழைவுத்தேர்வு அடிப்படையிலும், எம்டெக் எலெக்ட்ரிக் வெகிக்கில்ஸ் படிப்புக்கான சேர்க்கை கேட் நுழைவுத்தேர்வு அடிப்படையிலும், மற்ற இரு பிடெக் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை ஜெஇஇ நுழைவுத்தேர்வு அடிப்படையிலும் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ரூ.44,000 கோடியில் கண்ணிவெடி அகற்றும் திட்டம்: சீனா அச்சுறுத்தலுக்கு இடையே இந்தியா மீண்டும் தொடக்கம்

புதுடெல்லி, மே.28-

கப்பல் போக்குவரத்தை சீர்குலைக்க எதிரிப் படைகளால் கடலுக்கடியில் வைக்கப்பட்ட கண்ணிவெடிகளை கண்டறிந்து அழிக்க 12 சிறப்பு போர்க் கப்பலை உள்நாட்டிலேயே உருவாக்குவதற்கான நீண்ட காலமாக நிலுவையில் உள்ள திட்டத்தை இந்தியா மீண்டும் மும்முரமாக செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. அண்டை நாடான சீனாவுடன் அச்சுறுத்தல் அதிகரித்து வரும் நிலையில் இந்தியா இந்த நடவடிக்கையை தொடங்க உள்ளது.




இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சக வட்டாரங்கள் கூறியதாவது: எதிரி நாட்டு படைகளால் துறை முகங்களை அழிக்கவும், கப்பல் போக்குவரத்து மற்றும் கடல்சார் வணிகத்தை சீர்குலைக்கவும் நீருக்கடியில் வைக்கப்படும் கண்ணி வெடிகளை கண்டறிந்து அகற்றவும், கண்காணிக்கவும் கடற்படைக்கு ரூ.44,000 கோடியில் 12 மேம்படுத்தப்பட்ட கண்ணிவெடி கப்பல்களை (எம்சிஎம்வி) கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான திட்டம் விரைவில் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையிலான பாதுகாப்பு கவுன்சிலின் முன் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட உள்ளது.

பின்னர் இதற்கான டெண்டரில் இந்திய கப்பல் கட்டும் தளங்கள் தொழில்நுட்ப வணிக ஏலங்களை சமர்ப்பிக்க வாய்ப்பு வழங்கப்படும். இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு முதல் எம்சிஎம்வி பயன்பாட்டுக்கு வர குறைந்தபட்சம் 7 8 ஆண்டுகள் ஆகும்.

இந்திய பெருங்கடல் பகுதிக்கு வழக்கமாக வரும் சீன அணுசக்தி மற்றும் நீர்மூழ்கி கப்பல்கள் சத்தமின்றி கண்ணிவெடிகளை நீருக் கடியில் வைக்கக் கூடியவை. மேலும், சீனா பாகிஸ் தானுக்கு 8 புதிய யுவான் கிளாஸ் டீசல்மின்சார நீர்மூழ்கிக் கப்பல்களை பாகிஸ்தானுக்கு வழங்க உள்ளது. இது, அந்த நாட்டின் கடற்படை போர் திறனை மேலும் அதிகரிக்கும். இந்த சூழ்நிலையில்தான் கண்ணிவெடி அகற்றும் கப்பலை கொள்முதல் செய்யும் திட்டத்தை இந்தியா தீவிரப்படுத்தி உள்ளது. இவ்வாறு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்திய கடற்படையிடம் தற்போது ஒரு எம்சிஎம்வி கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதன் 6 கார்வார் கிளாஸ் மற்றும் பாண்டிச்சேரி கிளாஸ் கண்ணிவெடி கப்பல்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே படிப்படியாக ஓய்வுபெற்று விட்டன.

13 பெரிய துறைமுகங்கள் மற்றும் 200க்கும் மேற்பட்ட சிறிய துறைமுகங்களைக் கொண்ட நமது நாட்டின் 7,516 கி.மீ. நீளமுள்ள கடற்கரையைப் பாதுகாக்க இந்தியாவுக்கு 24 எம்சிஎம்விக்கள் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

# எஸ்ஐ பணிகளுக்கான தேர்வு குறித்து குழப்பம்: பழைய முறையிலா, நீதிமன்றம் அறிவுறுத்தியபடி நடத்தப்படுமா?

சென்னை, மே.28-

போலீஸ் எஸ்ஐக்கான தேர்வு வழக்கமான முறையில் நடைபெறுமா அல்லது உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியபடி புதிய முறையில் நடைபெறுமா என 3 லட்சம் தேர்வர்கள் குழப்பத்தில் உள்ளனர்.

தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் 1,299 எஸ்ஐ காலி பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை கடந்த மாதம் 4ம் தேதி அதிகாரப்பூர்வமாக வெளியிட்டது. இதையடுத்து, சுமார் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் விண்ணபித்தனர். வழக்கமாக காவல் துறையில் 2ம் நிலை, முதல்நிலை மற்றும் தலைமைக் காவலர்களாக பணியில் உள்ளவர்களும் எஸ்ஐ தேர்வுக்கு விண்ணபிப்பார்கள்.



இவர்களுக்கு 20 சதவீத ஒதுக்கீடு வழங்கப்படும். மீதம் உள்ள 80 சதவீதம் பொதுத் தேர்வர்களுக்கானது.

காவலர்களாக பணியில் சேர்ந்தவர்களுக்கு சட்டம் ஒழுங்கு, உளவியல் தொடர்புடைய கேள்விகள் கேட்கப்படும். அவர்கள் ஏற்கெனவே உடல் தகுதியை நிரூபித்து காவல் பணிக்கு சேர்ந்தவர்கள் என்பதால் உடல் தகுதி தேர்வு கிடையாது. ஆனால், பொதுப் பிரிவில் வருபவர்களுக்கு கூடுதலாக உடல் தகுதி தேர்வு நடத்தப்படும். அவர்களுக்கு சட்டம் தொடர்பான கேள்விகள் இருக்காது.

பொதுப்பிரிவு மற்றும் பணியில் உள்ள போலீஸாருக்கு தனித்தனி தேர்வு மற்றும் தனித்தனி மதிப்பெண் வழங்கப்படும். அதில் தேர்வானவர்களுக்கு எஸ்ஐ பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் பெறும் மதிப்பெண் அடிப்படையில் அவர்களுக்கு பதவி உயர்வில் முன்னுரிமை (சீனியாரிட்டி) வழங்கப்படும். அனால், 20 சதவீத ஒதுக்கீட்டில் தேர்வானர்கள் அனைவரும் தேர்வின்போது பெற்ற மதிப்பெண் அடிப்படையில் முதலில் வைக்கப்பட்டு அதன் பின்னரே பொதுப்பட்டியலில் உள்ளவர்கள் ஒன்றன்பின் ஒன்றாக இடம் பெறுவார்கள். இதுவரை இப்படிதான் நடந்து வருகிறது.

ஆனால், அண்மையில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் தேர்வின்போது பெற்ற மதிப்பெண் அடிப்படையிலேயே சீனியாரிட்டி இடம்பெற வேண்டும் என்ற வகையில் தீர்ப்பு வழங்கியது. அப்படி பார்த்தால், 20 சதவீத ஒதுக்கீட்டில் தேர்வாகும் காவலர்களுக்கு பின்னடைவு ஏற்படும். எனவே, வழக்கம்போல் தனித்தேர்வாக நடைபெற்று வெற்றி பெற்றவர்களுக்கு பழைய முறைப்படி சீனியாரிட்டி வழங்கப்படுமா அல்லது ஒட்டு மொத்தமாக அனைவருக்கும் ஒரே தேர்வு, ஒரே மதிப்பெண் என்ற வகையில் தேர்வு நடத்தி அதில் பெறும் மதிப்பெண் அடிப்படையில் மொத்த பேரும் சீனியாரிட்டி அடிப்படையில் வைக்கப்படுவார்களா என சுமார் 3 லட்சம் தேர்வர்கள் குழம்ப நிலையில் உள்ளனர்.

இதுதவிர எதிர்பார்த்தபடி அடுத்த மாதம் 28, 29ம் தேதிகளில் தேர்வு நடத்தப்படுமா என்ற குழப்பமும் உள்ளது. இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டபோது திட்டமிட்டபடி தேர்வு நடைபெறும். ஆனால், எந்த முறையில் நடைபெறும் என இதுவரை உறுதியாகவில்லை என்றனர். எஸ்ஐ தேர்வுக்கான அறிவிப்பு கடந்த மாதம் 4ம் தேதி வெளியிட்ட நிலையில், உச்ச நீதிமன்ற தீர்ப்பு அதன் பின்னரே வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.


# நாட்டில் கரோனா பாதிப்பு 1,000ஐ தாண்டியது

சென்னை, மே.28-

நாட்டில் கரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை ஆயிரத்தை கடந்துள்ளது. கேரளா, மகாராஷ்டிரா, டெல்லி ஆகிய மாநிலங்கள் முறையே முதல் மூன்று இடங்களில் உள்ளன.

நாட்டில் கரோனா வைரஸ் மீண்டும் பரவி வருகிறது. மத்திய சுகாதார அமைச்சகம் நேற்று காலை 8 மணி நிலவரப்படி கரோனா பாதிப்பு விவரத்தை பகிர்ந்து கொண்டுள்ளது.

இதன்படி நாட்டில் கரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 1,009 ஆக உயர்ந்துள்ளது. இதில் அதிகபட்சமாக கேரளாவில்



430 கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து மகாராஷ்டிராவில் 209 பேருக்கும் டெல்லியில் 104 பேருக்கும் குஜராத்தில் 83 பேருக்கும் கரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகள், அருணாச்சல பிரதேசம், அசாம், பிஹார், இமாச்சல பிரதேசம், ஜம்மு காஷ்மீர் போன்ற மாநிலங்களில் கரோனா தொற்று இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

கடந்த வாரம் மே 19ம் தேதி நாட்டில் கரோனா நோயாளிகள் எண்ணிக்கை 257 ஆக இருந்தது. இந்நிலையில் ஒரு வாரத்தில் புதிதாக 752 பேருக்கு கரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது.



## வேலூரில் மாநகராட்சி சார்பில் குப்பை எரிக்கும் இன்சினேட்டர் இயந்திரம் அமைக்கும் பணியை ஆய்வு செய்த ஆட்சியர்

வேலூர், மே.28-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, வேலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட1வது மண்டலத்தில் நாள் ஒன்றுக்கு 25 டன் குப்பையை எரிக்கும் இன்சினேட்டர் இயந்திரம் அமைக்கும் பணியை வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாநகராட்சி ஆணையர் ஜானகி, உதவி செயற்பொறியாளர் சந்திரசேகர், மாநகர சுகாதார அலுவலர் பிரதாப், மண்டல சுகாதார அலுவலர் சிவக்குமார் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



## திருச்சியில் பிரசித்திபெற்ற கருமண்டபம் இளங்காட்டு மாரியம்மன் ஆலய பால்குடம் மற்றும் தீமிதி திருவிழா

### 2000க்கும் மேற்பட்டோர் பால்குடங்களை எடுத்துவந்து அபிஷேகம் செய்தும், பூக்குழி இறங்கி நேர்த்திக்கடன் செலுத்தி வழிபாடு

திருச்சிராப்பள்ளி, மே.28-

திருச்சி மாநகர் கருமண்டபம் பகுதியில் எழுந்தருளியுள்ள அருள்மிகு இளங்காட்டு மாரியம்மன் ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்றதாகும் இவ்வாலயத்தில் வைகாசி ஆண்டுத்திருவிழாவானது வருடந்தோறும் வெகுசிறப்புடன் பக்தர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி நடப்பாண்டு, 76 ஆம் ஆண்டு வைகாசி திருவிழா கடந்த 18ஆம் தேதி அன்று காப்புகட்டுதல் மற்றும் பூச்சொரிதல் வைபவத்துடன் தொடங்கி நடைபெற்றுவருகிறது.

விழாவின் முக்கிய நிகழ்வாக பால்குடம் மற்றும் தீமிதி திருவிழா இன்று நடைபெற்றது.

முன்னதாக கோரையாற்றில் இருந்து இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் பால்குடங்களை தலையில் சுமந்தும், அதனைத் தொடர்ந்து ஏராளமான பக்தர்கள் தங்களது நேர்த்திக்கடனை செலுத்தும் வகையில் அலகுகுத்தி கரகம், அக்னிசட்டி மற்றும் கரும்பு தொட்டில் எடுத்துவந்து பூக்குழி இறங்கியும் அம்மனுக்கு பாலபிஷேகம் செய்தும் வழிபாடு இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று அம்மனை வணங்கிச் சென்றனர். நாளை அம்மன் வீதிஉலாவும், அதனைத் தொடர்ந்து மஞ்சள் நீராட்டு வைபவத்துடன் திருவிழா நிறைவு பெறுகிறது.



## வேலூர் மாநகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து ஆய்வு கூட்டம்

### மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் ஆகியோர் பங்கேற்பு

வேலூர், மே.28-

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வேலூர் மாநகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி மற்றும் சட்டத்துறை நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் ஆகியோர் தலைமையில் நடை பெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், கார்த்திகேயன், வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாபு, துணை மேயர் மா.சுனில்குமார், மாநகராட்சி ஆணையாளர் ஜானகி, துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ தமிழக நாயுடு கூட்டமைப்பின் மாநில தலைவராக காரைக்குடி சரஸ்வதி ஸ்டுடியோ P. முருகன் நாயுடு தேர்ந்தெடுக்கப்பட்டு தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டார். இவ்விழாவில் மாநிலச் செயலாளர் ரங்கராஜன் நாயுடு மாநில பொருளாளர் கும்பகோணம் கார்த்திகேயன் நாயுடு, மாநில செயல் தலைவர் சென்னை முருகையன் நாயுடு, மாநிலத் துணைத் தலைவர் மதுரை தத்து பெருமாள் நாயுடு, மாநிலத் துணைச் செயலாளர் பெரம்பலூர் கண்ணபூரன் நாயுடு, மாநிலத் துணைத் தலைவர் திருச்சி வெங்கடேஷ் நாயுடு, மாநிலத் துணைத் தலைவர் கள்ளக்குறிச்சி சங்கராபுரம் செங்குட்டுவன் நாயுடு, மாநில துணைச் செயலாளர் மதுரை ஸ்ரீ பாலாம்பிகா ராஜன் பாபு நாயுடு, மாநில நிர்வாக குழு உறுப்பினர் சென்னை பெருமாள் நாயுடு, மாநில நிர்வாக குழு உறுப்பினர் விருத்தாச்சலம் ஜனார்த்தன் நாயுடு, மாநில நிர்வாக குழு உறுப்பினர் மதுரை ஸ்ரீதர் நாயுடு, மாநில நிர்வாக குழு உறுப்பினர் திருப்பூர் ஸ்ரீனிவாசன் நாயுடு ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தி சிறப்பித்தனர்.



## 15வது வார்டு காளியம்மன் கோவில் மண்டபத்தில் இரண்டாம் ஆண்டு கல்வி பரிசளிப்பு விழா

தேனி, மே.28-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் 15வது பகுதி காளியம்மன் கோவில் மண்டபத்தில் 10 மற்றும் 12ம் வகுப்புகளில் தேர்ச்சி பெற்ற மற்றும் அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கு பரிசளிப்பு மற்றும் பாராட்டுவிழா இரண்டாம் ஆண்டு விழா நிகழ்ச்சியாக ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு மேல் வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவின் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் காவல்துறை உயர் அதிகாரி எஸ். பிரபாகரன், ஸ்பைசஸ் போர்டு எஸ். ராஜேந்திரன், போடி நகர் காவல் ஆய்வாளர் சுப்புலட்சுமி, சார்பு ஆய்வாளர் கிருஷ்ணவேணி ஆகியோர்கள் கலந்து கொண்டு அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளையும் ஊக்கத் தொகையும் வழங்கினர். இவ்விழா வினை ஏற்பாடு செய்த 15 வது வார்டு பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் மற்றும் இளைஞர்களும் நூற்றுக்கும் மேற்பட்டோர்கள் கலந்து கொண்டனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 112 அடியை நெருங்குகிறது

சேலம், மே.28-

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 111.73 அடியாக உயர்ந்துள்ளது. மேலும், நீர்வரத்து விநாடிக்கு 3,548 கனஅடியாக அதிகரித்துள்ளது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்துவரும் மழையால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 2,878 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை விநாடிக்கு 3,548 கனஅடியாக அதிகரித்துள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 1,000 கனஅடி நீர் திறந்து விடப்படுகிறது. நேற்று முன்தினம் 111.60 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று காலை 111.73 அடியாக உயர்ந்துள்ளது. அணையில் 80.89 டிஎம்சி நீர் இருப்பு உள்ளது. தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரியாற்றில் கடந்த 2 நாட்களாக நீர்வரத்தில் மாற்றமின்றி உள்ளது. நீர்வரத்து நேற்று முன்தினம் விநாடிக்கு 4,000 கனஅடியாக இருந்த நிலையில், நேற்று மாலை அளவீட்டின் போதும் 4,000 கனஅடியாகவே நீடிக்கிறது.

## வேலூரில், அனைத்திந்திய முதலியார் பிள்ளைமார் சங்கம் சார்பில் மணமாலை சந்திப்பு நிகழ்ச்சி



■ வேலூர் மாவட்டம், வேலூர் அடுத்த திருமலைக்கோடி, நாராயணி மஹாலில் அனைத்திந்திய முதலியார் பிள்ளைமார் சங்கம் சார்பில் மணமாலை விழா, சங்கத் தலைவர் ராம்குமார் முதலியார், சங்க செயலாளர் முருகேசன் முதலியார், பொருளாளர் செந்தில்குமார் முதலியார் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.



### வேலூரில், பஜாஜ் சி.என்.ஜி மூன்று சக்கர ஆட்டோ அறிமுகம்

## சி.என்.ஜி-யில் 45km முதல் 50km வரை கூடுதல் மைலேஜ் ஆட்டோ அறிமுகம்

### சிறப்பு சலுகையில் எக்ஸ்சேஞ்ச் ஆபர் மற்றும் சிறப்பு சலுகை விலையில் ஆட்டோ விற்பனை

வேலூர், மே.28-

வேலூர் மாவட்டம், வேலூர், தோட்டப்பாளையம், சி.என்.ஜி ஆட்டோ அறிமுக விழா, நறுவி மருத்து வமனை அருகே, பெருமுகையில் பஜாஜ் ஆட்டோ மொபைல்ஸ் திறக்கப்பட்டுள்ளது. இங்கே எக்ஸ்சேஞ்ச் மேளாவில் ஆட்டோவை பெற்றுக்கொள்ளலாம். சி.என்.ஜி. மாடலுக்கு மெகா ஆஃபர் கொடுக்கப்பட்டுள்ளது. மற்றும் சிறந்த மைலேஜ், மிகக் குறைந்த பராமரிப்பு மற்றும் வங்கி மூலமாக லோன் வசதியும் செய்து தரப்படும் என தெரிவித்துள்ளனர். அதேபோல் ஒவ்வொரு எக்சேஞ்ச் ஆட்டோ விற்கும் ரூபாய் 15 ஆயிரம் சிறப்பு தள்ளுபடி சலுகையும் செய்து தரப்படும் என தெரிவித்தனர். இந்த அறிமுக விழா வேலூர் சத்துவாச்சாரி சாலை நறுவி மருத்துவமனை அருகே உள்ள ஆட்டோ ஸ்டாண்டில், வேலூர் கிளை மேலாளர் ஜெகன் அண்ட் ஆம்பூர் கிளை மேலாளர் ஆர்.கோபி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரவீன், தீபக் சேல்ஸ் எக்ஸ்யூடிவ் ஆகியோர் உடனிருந்தனர். இந்நிகழ்ச்சியின் போது ஆட்டோ ஸ்டாண்ட் சங்க தலைவர் பாலு தலைமையில் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் என பலர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

## கரோனா, வைரஸ் காய்ச்சல் பரவல்: பொதுமக்கள் கூடும் இடங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்க பொது சுகாதார துறை அறிவுறுத்தல்

சென்னை, மே.28-

தமிழகத்தில் கரோனா, இன்ஃப்ளூயன்சா, வைரஸ் காய்ச்சல் அதிக அளவில் பரவுவதால், மக்கள் கூடும் இடங்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்குமாறு பொது சுகாதார துறை இயக்குநர் செல்வவிநாயகம் அறிவுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் கரோனா, இன்ஃப்ளூயன்சா, வைரஸ் காய்ச்சல், வயிற்றுப்போக்கு பாதிப்புகள் கடந்த சில வாரங்களாக அதிகரித்து வருகிறது. இதையடுத்து, மாவட்ட சுகாதார அதிகாரிகளுக்கு பல்வேறு வழிகாட்டுதல்களை பொது சுகாதார துறை இயக்குநர் செல்வவிநாயகம் வழங்கியுள்ளார். அவர் தெரிவித்துள்ளதாவது:

தமிழகத்தில் சமூக, கலாச்சார, ஆன்மிக நிகழ்ச்சிகள், அரசியல் கட்சி பொதுக் கூட்டங்கள் அதிக எண்ணிக்கையில் நடைபெறுவதும், அதில் அதிகமானோர் பங்கேற்பதும் அதிகரித்துள்ளது. அந்த கூட்டங்களில் தொற்று பரவல் ஏற்படாமல் தடுக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். குறிப்பாக, கிருமிநாசினி பயன்பாடு, உணவு மற்றும் குடிநீரின் தரம் ஆகியவற்றை உறுதி செய்ய வேண்டும். கழிப்பறைகளை தூய்மையாக பராமரிக்க வேண்டும். உடல்நலத்துக்கு தீங்கு விளைவிக்கும் உணவுகளை விநியோகம் செய்ய கூடாது. பாதுகாக் கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும். திடக்கழிவு மேலாண் மையில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

கொசுக்கள், பூச்சிகள் மூலம் பரவும் நோய்களை தடுக்க உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். குறிப்பிட்ட இடத்திலோ, பகுதியிலோ நோய் தொற்று பரவினால் உடனடியாக அதை கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அறிவிக்கை செய்யப்பட வேண்டிய நோய்கள் ஓரிடத்தில் தீவிரமாக பரவினால், அதுகுறித்து ஆய்வு செய்து, மக்கள் கூடும் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்த வேண்டும். தேவைப்பட்டால் நிகழ்ச்சிகளை தள்ளிவைக்கவோ, நிறுத்திவைக்கவோ நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## மதுரை சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு மதுரை தமுக்கம் மைதானத்தில் நடைபெற்று வரும் அரசுப் பொருட்காட்சியை 1 இலட்சத்து 30 ஆயிரத்து 145 நபர்கள் (19 நாட்களில்) பார்வையிட்டுள்ளனர்

### அரசுப் பொருட்காட்சியின் வாயிலாக அரசுக்கு 18 இலட்சத்து 38 ஆயிரத்து 190 ரூபாய் ஈட்டப்பட்டுள்ளது

மதுரை, மே.28-

சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு மதுரை தமுக்கம் மைதானத்தில் நடைபெற்று வரும் அரசுப் பொருட்காட்சியை இதுவரை 1 இலட்சத்து 30 ஆயிரத்து 145 நபர்கள் பார்வையிட்டுள்ளனர். அரசுப் பொருட்காட்சியின் வாயிலாக அரசுக்கு 18 இலட்சத்து 38 ஆயிரத்து 190 ரூபாய் ஈட்டப்பட்டுள்ளது.

சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் தமுக்கம் மைதானத்தில் அரசு சார்பில் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, இந்த ஆண்டு பொருட்காட்சி கடந்த 04.05.2025அன்று மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் தொடங்கி வைத்தார். இந்தப் பொருட்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை, சுற்றுலாத் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வனத்துறை,



வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை உள்ளிட்ட 26 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், மதுரை மாநகராட்சி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், ஆவின் உள்ளிட்ட அரசு சார்பு நிறுவனங்கள் மூலம் 6 அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. அரசு மக்கள் நலனுக்காக செயல்படுத்தி வரும் நலத்திட்டங்கள், அவற்றின் பயன்பெறும் வழிமுறைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் அரசுத்துறைகளின் சார்பாக கண்கவரும் வகையில் அரங்குள் இடம்பெற்றுள்ளன. மேலும், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அரசுத்துறைகளின் சார்பாக சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. அதேபோல, இளைஞர்கள் மற்றும் குழந்தைகளுக்கு பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த தனியார் விளையாட்டு மற்றும் கேளிக்கை அரங்குகள், பல்பொருள் விற்பனை அங்காடிகள் இடம்பெற உள்ளன. மேலும், தினந்தோறும் இன்னிசை கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த பொருட்காட்சி தினந்தோறும் மாலை 3.45 மணி முதல் இரசு 9.30 மணி வரை நடைபெறுகிறது. நுழைவு கட்டணமாக பெரியவர்களுக்கு ரூ.15 ரூபாயும், சிறியவர்களுக்கு ரூ.10 ரூபாயும் வசூலிக்கப்படுகிறது. இதுவரை அரசுப் பொருட்காட்சியை இதுவரை 1 இலட்சத்து 30 ஆயிரத்து 145 நபர்கள் கண்டுகளித்துள்ளனர். இது கடந்த ஆண்டு பார்வையாளர்களின் எண்ணிக்கையைவிட அதிகம் ஆகும். இந்தப் பொருட்காட்சி வருகின்ற 22.06.2025 ஆம் தேதியன்று நிறைவடைகிறது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161